உ

சிவமயம்.

சித்திவிநாயகர்துணை.

பர்மா டாப்பு

# நொண்டிச்சிந்து.

—:O:—

இஃது

அளவிறந்த புகழ்நிறைந்த
வணிகர்குலதிலகர்கள்
பர்மியருடைய நகரில்வந்து
வர்த்தகஞ்செய்கின்ற தன்மையை
தஞ்சாவூர் ஜில்லா
கருந்தட்டாங்குடியிலிருக்கும்
க. ஜெயராஜசிங்கதிரிபுவனேந்திரரால்
இயற்றப்பட்டு

இரங்கோன்:
32-வது கல்லி, 14-நெம்பர் வீடு,
மீனாட்சியம்மன்" அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

1906.

இதன் விலை அணா (க)

ROJA MUTHIAH
47. HOSPITAL STREET
KOTTAIYUR—623 106
P.M.DIST. INDIA

உ

சிவமயம்.

சித்திவிநாயகர் துணை.

வெண்பா.

சீர்வளர்பர் மாநாட்டின் சிந்துதனைச் செந்தமிழால்
யேர்வளரப் பூவிலிசைப்பவே—வார்வளர்ந்த
கொங்கையுமை தந்தமதகுஞ்சரமுக னறனருள்
தங்குபத நன்குதுணை தான்.

——*——

# நொண்டிச்சிந்து.

இராகம்.

தெந்தினதினனை தினனை தெந்தினதினதின தினனை.

பாண்டியநாடுதனில் நாங்களும்
பத்தினிமார் பிள்ளையுடன் சுகித்திருந்தோம்
பொருள் மிகத்தேடவென்று எங்கள்
புத்திரர் பெண்டீரைவிட்டுசுத்தபிரமம்போல்
மறையவர்தனையழைத்து நாட்பார்த்து
மறுதேசம் பிறப்பிட எத்தனஞ்செய்தோம்
அப்படியிருக்கும்போது எங்களை
அன்பாகக் கூப்பிட்டார் சம்பத்துடையார்
அதற்குமே சம்மதித்து நாங்களும்
ஆளுக்குத் தகுந்தபடி சம்பளம்பேசி
முடித்துமுன் பார்த்தநாளில் எங்களை
முதலாளிமார்கள் வந்துபயணஞ்செய்தார்
சகுனங்கள்தான் பார்த்தோம் நல்ல
சகுனங்களானதினால் மதுரைவந்து
யிறங்கி யிருந்தோமன்று சுவாமிக்கி
எருளமாய்ப் பழந்தேங்காய்வாங்கி

ROJA MUTHIAH
47. HOSPITAL STREET
KOTTAIYUR—623 106
R.M.DIST. INDIA

Best copy available

அர்ச்சகர் தனையழைத்து சுவாமிக்கி
அர்ச்சனைகள் செய்துமிகப் பணிந்து நின்றோம்
விபூதிபிரசாதம் தந்து
வேண்டிய பாக்கியமுடன் வருவீரென்று
கடவுளைப்போலே சொன்ன அர்ச்சகற்கு
காணிக்கையாக வேணதளித்து
மறுநாள்க் காலைதனில் நாங்களும்
மதராஸ்தன்னிற் சென்றிறங்கி
ஜவுளிப்பிடவைகளும் நல்லாய்
சவுக்கியமாகவே வாங்கிக் கட்டி
இன்னஞ்சில சாமான் வேண்டிய
தெல்லாமொழுங்காகச் சேகரித்து
கப்பலில்ப் போய் ஏறி நாலாநாள்
கண்டோம் இரங்கோன் துறைமுகத்தை
எதிற்கொண்டு வந்தார்கள் யெங்கள்
இனமானபந்துக்களும் சொந்தக்காரரும்
அவர்களுடன்கூடி யோகக்ஷேமம்
அன்பாக விசாரித்து சந்தோஷத்துடன்
கப்பலை விட்டிரங்கி அவர்களுடன்
கரைதனில்ச் சென்றுமே காடியிலேரி
வீட்டிற் போய்ச்சேர்ந்து சற்றிருந்து
வென்னீரு போடச்சொல்லி ஸ்நாநங்கள்செய்தோம்
மடிகள் தரித்துக்கொண்டோம் மேல்வீட்டில்
மயில்வாகனக் கடவுள் தனைப் பணிந்தோம்
போஜனச் சாலையிற்போய் அறுசுவைப்
போஜனங்கள் செய்துமே கையலம்பி
தாம்பூலந் தனையணிந்து பாய்விரித்து
சற்றிளைப்பாறவே நித்திரைசெய்தோம்
மாலைப்பொழுதிலெழுந்தோம் யெங்கள்
வணிகர்குல தெய்வத்தைப் பணியவென்று
பசுமந்தான் தன்னிலேபோய் யெங்கள்
பரமகுருபரனைப் போற்றிசெய்தோம்

கற்பூர தீபம்பார்த்து முருகனுக்கு
காணிக்கைப் போட்டு விபூதிவாங்கி
தரித்தோம் வினைதீர ஹரஹர
சாப்பசிவாவென்று தான்பணிந்து
போய்ச்சேர்ந்தோம் நாட்டுப்புரம் கடைவைக்க
புதிதாய் வீடுகளும் தானமற்றி
வைத்தோம் கடைதனையும் அதுமுதல்
வாங்கல் கொடுக்கல்களும் நடத்திவந்தோம்
விருமா விளப்பமென்ன கேட்க
வேடிக்கையாயிருக்குஞ் சொல்லுகிறேன்
பெண்காணியான தேசம் அந்தப்
பெண்டுகள்சொற் கேளாவிடில் சண்டைகள்வரும்
யாபாரஞ் செய்வதும்பெண் அவர்க
ளாண்பிள்ளைமார்களால் ஒன்றுமில்லை
அழகிற் சிறந்தவர்கள் அவர்களும்
ஆற்றிலே இரண்டுமூன்று தரங்குளிப்பார்
சணக்காதனைப் பூசுவார் இரண்டு
சட்டையும்போடுவார் ஒன்றுமேலொன்றாய்
சீவிமயிர்முடிப்பார் நல்ல
சிகப்புச் சவுக்கங்களும் அணிந்துக்கொண்டு
அரையிலே லொங்கிகட்டி குடைபிடித்
தாண்பிள்ளைகள் போலக்கை வீசிநடப்பார்
நத்தாவும் பத்திகளும் மோதிரம்
நக்காணும் காப்புகளும் அணிந்துக்கொண்டு
சீஞ்சுவைச் சிப்புகளும் நல்ல
ஜீறைப்புச் செண்டுகளும் தான்முடித்து
தோப்பியாங் கொடியுடனே நாய்ச்சோவு
துடிக்காய் அணிந்துமே மினுக்கிடுவார்
நாணப்படமாட்டார் பார்க்க
நடனஞ்செய் தாசிகள்போல் நடப்பார்
காந்தர்வ மணஞ்செய்து கூடிக்
கலந்திடலாமென்று தானினைத்தால்

மங்கைப் பருவமுள்ள பெண்கள்
வருவார்கள் கோடான கோடியாக

வகைசொல்லமுடியாது அவர்களை
வாண்டாமென்றாலும்விட்டுப் போகவே மாட்டார்

எந்தநேரமுங்கலவி செய்ய
யிணங்காவிடிற்கன வம்புகள்செய்வார்

மதப்பயல் குடியிருக்கும் பர்மா
மாதனை அடுத்தவர்கள் ஆண்டியாய்ப்போவார்

பெலமெல்லாம் வாங்கிக்கொள்வார் நம்மளையுப்
பெண்டுகள் பிள்ளைகளுடன் போகவும் விடார்

ஒருபிள்ளைப் பெறும்வரையில் அந்த
ஓதியர்கள் மேல்மயக்கம் யாருக்குமுண்டு

ஒருபிள்ளை தான் பெற்றால் அப்புறம்
ஒணாய்கள்போலவே திரிந்திடுவார்

பிள்ளைக் குறைவுமில்லை அவர்களும்
புருஷனை மதிப்பாக யெண்ணவேமாட்டார்

ஆனதால் சொன்னேனிதை புத்திமான்கள்
ஆராய்ந்துப் பார்த்தாக்கால் தெரியும் நன்றாய்

நெல்வட்டி கடன்வாங்குவார் செய்தொழில்
நிரைவாகவேமிச்சந்தான் கிடைத்தால்

வட்டியுடன் முதல்தருவார் இல்லாவிடில்
வாங்கின கடன்கொடாமல் ஓடியேபோவார்

தேடிப் பிடிப்போமென்றால் கடனீய்ந்தோர்
திரிந்தலைந்தாலும் அகப்பட மாட்டார்

ஒருக்கால் கண்டுகேட்டால் கத்தியால்
ஓங்கியே வெட்டுவார் பனங்காயைப்போல்

பகையென்பதாகாது பர்மாவில்
பகைத்தவர் ஆவிகளை கன்றுவிடும்

மடப்பயல் ஜாதிகளாம் அரிவுள்ள
மனிதனைக் கொல்லுவதில் லெக்ஷயமில்லை

ஆடுகள் மாடுகள்போல் அவர்கள்
அஞ்சவேமாட்டாரறிவு கெட்டோர்
மூடப்பயல் ஜாதி ரெம்ப
முறட்டுத்தனங்களாய்த் திரிந்திடுவார்.
வசையில்லாச் சேதிசொல்ல அவர்கட்கு
வாறுது வாயினில் என்னாளும்
நப்பிகள் தின்றிடுவார் நாத்தமுள்ள
நப்பியாம் உளந்தண்ணி தான்குடிப்பார்
வேம்பு சுறா பறங்கி காஞ்சிறை
வெருகு புளிபாகை மாங்கொழுந்து
மூங்கிக்கிழங்குகளும் நல்ல
மொச்சை தட்டப்பயர் முறையுடனே
மாட்டுக்கரிகளுடன் கெட்ட
மறைபன்றி குதிரையின் கரிகளுமே
பாம்பு தவளைகளும் கூனி
பத்துக்காலுள்ளதோர் நண்டுடனே
இன்னஞ்சில சாமான் இவர்கள்
எக்களிப்பாகவே தின்றிடுவார்
இப்படி மனிதருமுண்டோ இவர்களை
என்னவென்று தான்சொல்ல மனதுவரும்
அவர்களிடந்தனிலே பணங்கொடுத்து
அஞ்சுகால் வட்டி முதல்வாங்க
படவுகள் தனிலேறி போர
பாதையிலடித்தாலும் கேள்வியுண்டோ
அலைகள் திகமானால் படவுடன்
ஆற்றுக்குளமிங்கியே பிளைக்கவேணும்
காட்டையடிக்கவேணும் இல்லாவிடில்
கனவம்பு பண்ணுவான் சுக்கான்காரன்
எதிர்த்தண்ணியாயிருந்தால் அப்போது
எய்யாதடிக்கவேணும் கைசிவக்க

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR—623 106
P.M.DIST. INDIA

கைப்பொங்கல் பொங்கவேணும் இல்லாவிடில்
காயவேணும் போனவர்கள் காடுதனிலே
உப்புடன் புளியிருந்தால் வரமிளகாய்
ஒருநாளுமகப்பட மாட்டாதங்கே
கையிலே கொண்டுபோனால் அதனைக்
காச்சிக்குடிக்க நல்ல யிடமுமில்லை
எட்டு நாள் கிடந்தாலும் எங்களை
ஏனென்றுங்கேட்க மனிதரில்லை
பெற்றார் பிறந்தாரில்லை யெங்களைப்
பெருமாள் மருகனெனும் முருகன்காப்பார்
வணிகர் குலத்துதித்து சம்பளத்துக்கு
வந்ததினலிப்படித் திரிந்தலைந்தோம்
இரவுபகலுமின்றி நேரம்
இன்னதென்றுமில்லாமல் போகவேணும்
பணத்துட ஆசையினால் நாமளும்
பட்டப்பாடுகள் போதும் தலைமுழைக்கி
எனங்களிற் கொடுத்ததெல்லாம் புதுக்கணக்
கேஜண்டு மனம்போலே எழுதிவிட்டு
பாக்கியுள்ள பெனங்களிலே கோர்ட்டில்
பிராதுசெய்து சம்மன்களும் தான்செலுத்தி
வராதயெனங்களிலே கோர்ட்டில்
வாரண்டு கிளப்பியே சொத்தைப்பிடித்து
ஏலங்கள் தான்போட்டு பணத்தை
யிதவாக வாங்கியே கொடுத்துவிட்டு
சம்பளச்சீட்டுபடி வருஷமூன்றுந்
தானிருந்து வேலைகளும் பார்த்துவிட்டு
சம்பளச்சாமானும் வழிச்செலவுந்
தானுமே வாங்கியே இரங்கோன் வந்து
கப்பலிற் போயேறி ஐந்துநாளும்
கவலையுந் துன்பமும் மிகவடைந்து

மதராசு தனிலிரங்கி அங்கு
மனதிற் களிப்படைந்து போஜனஞ்செய்து
வேண்டியசாமானும் நாங்கள்
விதவிதமாய் வாங்கிப் பொட்டிபோட்டு
ரயில்தனி லேற்றிக்கொண்டு நாங்களும்
நன்றாகத் தஞ்சாவூர் வந்துசேர்ந்தோம்
வண்டிகள் தான்பிடித்தோம் புதுக்கோட்டை
மார்க்கமாய் முதலாளி வீடுசென்று
காசுப்பைக் கணக்குகளும் ஜந்துகையுங்
கட்டி அவர்களிடம் ஒப்பித்துவிட்டு
சம்பளச்சீட்டுவாங்கி அவர்கள்வீட்டிற்
சாப்பிட்டுச் சொல்லிக்கொண்டு வண்டியிலேறி
பிளைத்தோம் பிளைத்தோமென்று யெங்கள்
பெண்டாட்டி பிள்ளைமுன் வந்துசேர்ந்தோம்.
ஐங்கரன் பதம் வாழி சத்தியுமை
யரியயன் ஞெளிர்பரசிவம் வாழி
செங்கரமயில்தாங்கு மயிலேறு
சேவகன் வள்ளிதெய்வானை வாழி
அருமறைகலை வாழி வேதிய
ரரசர் வைசியர்பின்னவர் வாழி
திருமா மகள் வாழி கலைபொழியுந்
தேவியினுெடு பூதலம் வாழி
தெந்தின தினனுை தினனுை
தெந்தின தினதின தினனுை

முற்றிற்று.